வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி 28.08.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தேசிய தொழில் நெடும்பாதை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிதாக 12 இடங்களில், ஸ்மார்ட் தொழில் நகரங்களை அமைக்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

234 நகரங்களில், 730 தனியார் பண்பலை வானொலி அலை வரிசைகளை, மின்னணு முறையில் ஏலம் விடவும், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் மருந்து உற்பத்தித் துறை, 2030ஆம் ஆண்டிற்குள், 130 பில்லியன் டாலர் துறையாக மேம்படும் என்று, மத்திய தொழில் – வர்த்தகத் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

டாக்டர்களின் பாதுகாப்புக் குறித்த தேசிய பணிக் குழு இன்று, மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் மற்றும் காவல்துறைத் தலைவர்களுடன், காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டது.

--------------------------

அமைச்சரவை 1 (13)

தேசிய தொழில் நெடும்பாதை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிதாக 12 இடங்களில், ஸ்மார்ட் தொழில் நகரங்களை அமைக்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இதை தெரிவித்தார். புதிய தொழில் பகுதிகளில், ஒட்டு மொத்த முதலீடு, 28 ஆயிரத்து 602 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளதாகவும், இத்திட்டங்களால் 10 லட்சம் நேரடி வேலை வாய்ப்புகள் மற்றும் 30 லட்சம் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். நாட்டின் 6 முக்கிய தொழில் நெடும்பாதைகளில், உத்தராகண்ட் மாநிலம் குர்ப்பியா, பீகார் மாநிலம் கயா, உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக் ராஜ், தெலங்கானா மாநிலம் ஜஹீராபாத், கேரள மாநிலம் பாலக்காடு உள்ளிட்ட இடங்களில், புதிய ஸ்மார்ட் தொழில் நகரங்கள் அமைய உள்ளன.

*அமைச்சரவை 2 (18)*

234 நகரங்களில், 730 தனியார் பண்பலை வானொலி அலை வரிசைகளை மின்னணு முறையில் ஏலம் விடும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தாய்மொழியில், உள்ளூர் நிகழ்ச்சிகள் வழங்கப் படுவதையும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இதனால் ஏதுவாகும். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். அமைச்சரவையின் முடிவினால், 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை நகரங்களுக்கு, பண்பலை

வானொலி கிடைக்கும் என்றும், உள்ளூர் திறமைகள் இதனால் ஊக்கம் பெறும் என்றும் கூறினார்.

முற்றிலும் மத்திய அரசு ஆதரவுடனான **வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தை**, படிப்படியாக விரிவாக்கம் செய்யும் உத்தேசத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால், நாட்டின் வேளாண் உள்கட்டமைப்பு கணிசமாக வலுப்பெறும் என்றும், வேளாண் சமூகத்தினருக்கு, அதிக பலன் கிடைக்கும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு உதவிகளை வழங்கும் நோக்கத்திலான, **வேளாண் உள்கட்டமைப்பு நிதியம்,** 1 லட்சம் கோடி ரூபாய் அடிப்படை நிதியுடன் கடந்த 2020ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

*அமைச்சரவை 3 (11)*

ரயில்வே துறையில், மொத்தம் 6 ஆயிரத்து 456 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், 2 புதிய ரயில் பாதைத் திட்டங்கள், மற்றும், ஒரு **பல்தடப் பாதை** திட்டத்தை செயல்படுத்தவும், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களால், சுமார் ஆயிரத்து 300 கிராமங்களுக்கும், 11 லட்சம் மக்களுக்கும் போக்குவரத்து கிடைக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். இத்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகளின் போது மொத்தம் 114 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாகும் என்றும், அவர் கூறினார்.

எண்ணெய் இறக்குமதியை குறைத்து, கார்பன் புகை வெளியீட்டைக் கட்டுப்படுத்தவும், இத்திட்டங்கள் உதவிகரமாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---------------------------

ஜன் தன் (13)

முறையான நிதி வசதிகளை அனைவருக்கும் வழங்குவதில் பிரதமரின் ஜன் தன் திட்டம் முக்கிய பங்காற்றி இருப்பதாக, மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். ஜன் தன் திட்டம் இன்று 10ஆம் ஆண்டை எட்டி இருப்பதை ஒட்டி, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமரின் சீரிய தலைமைக்கான எடுத்துக்காட்டாகவே இத்திட்டம் திகழ்வதாக கூறினார். ஜன் தன் வங்கிக் கணக்குகளின் மொத்த எண்ணிக்கையில், பெண்களின் பங்கு, 55 சதவிகிதம் என்றும், இதனால் ஒவ்வொரு வீட்டிலும், பெண்களுக்கு அதிகாரம் கிடைத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். பிரதமரின் கிசான் திட்ட நிதி உதவிகள், உரிய நேரத்தில், கசிவு ஏதுமின்றி பயனாளிகளுக்கு சென்று சேர, ஜன் தன் வங்கிக் கணக்குகள் உதவி இருப்பதாகவும், நாட்டின் வரலாற்றில், இது மிகப் பெரிய பொருளாதார சீர்திருத்தம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்காட்சி (16)

இந்தியாவின் மருந்து உற்பத்தித் துறை, 2030ஆம் ஆண்டிற்குள், 130 பில்லியன் டாலர் துறையாக மேம்படும் என்று, மத்திய தொழில் –

வர்த்தகத் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார். கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்திய கண்காட்சி அரங்கில், மருந்து உற்பத்தித் துறை தொடர்பான 10ஆவது சர்வதேச கண்காட்சியை இன்று அவர் தொடக்கி வைத்து பேசினார். உலகின் மருந்து உற்பத்திக் கூடமாகவே இந்தியா கருதப்படுவதாகவும், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருந்து உற்பத்தி பிரிவுகளுடன் இந்தியாவில் செயல்பட்டு வருவதாகவும், அமைச்சர் தெரிவித்தார். ஜெனடிக் மருந்துகளின் உலக அளவிலான உற்பத்தியில் இந்தியா 20 சதவிகித பங்களிப்பதாகவும் அவர் கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள், மருந்து உற்பத்தித் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியாவை உயர்த்த, அரசு உறுதி பூண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதற்கு ஏதுவாக, மருந்து இறக்குமதியை குறைத்து, உள்நாட்டு அளவிலான மருந்து உற்பத்தியை அதிகரிக்கவே, இத்துறையில், உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

---------------------------

*பணிக்குழு (16)*

டாக்டர்களின் பாதுகாப்பு மற்றும் பணிச் சூழலை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்க, உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட தேசிய பணிக்குழு இன்று, இதற்கான குறுகிய கால நடவடிக்கைகள் குறித்து, மாநிலங்களின் தலைமை செயலர்கள் மற்றும்

காவல் துறை தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டது. காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, மத்திய உள்துறை செயலரும், சுகாதாரத் துறை செயலரும் இணைந்து தலைமையேற்றனர். தேசியப் பணிக்குழுவின் முதலாவது கூட்டம், மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமையில், நேற்று நடைபெற்றது. கொல்கத்தா பெண் டாக்டர் கொலை தொடர்பான வழக்கு விசாரணையின் போது அமைக்கப்பட்ட இக்குழுவின் இடைக்கால அறிக்கை, 3 வாரங்களுக்கு உள்ளாகவும், இறுதி அறிக்கை, 2 மாதங்களுக்கு உள்ளாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. டாக்டர்களின் பாதுகாப்பு குறித்து, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினர் தங்களின் கருத்துக்களை பதிவு செய்ய ஏதுவாக, மத்திய சுகாதார அமைச்சகத்தின் இணைய தளத்தில் புதிய வசதிகள் சேர்க்கப் பட்டுள்ளன.

--------------------------

திறன் பயிற்சி (19)

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில், மகளிர் உழைப்பாளர் சக்திக்கு முக்கிய பங்கு இருப்பதாக, மத்திய திறன் மேம்பாட்டுத் துறைச் செயலர் திரு. ஏ.கே. திவாரி கூறியுள்ளார். வளர் இளம் பருவத்தில் உள்ள சிறுமிகள் மற்றும் பெண்களின் அதிகாரப் பங்கேற்பு குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நோக்குநிலைப் பயிலரங்கில் உரையாற்றிய அவர், கல்வி, பயிற்சி, சமூகப் பொருளாதாரக்

கட்டுப்பாடுகள், பொருளாதார வாய்ப்பின்மை போன்ற பல சவால்கள் பெண்களுக்கு இருப்பதால், பெண்கள் அனைவருக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் அவசியம் என்றார். இதுகுறித்து, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகம், குழந்தைகள் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைச் செயலர் திரு. அனில் மாலிக் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பாரம்பரிய தொழில்களுக்கு அப்பாற்பட்ட தொழில்களில் பெண்களுக்கு பயிற்சி அளிக்க, இரு துறைகளும் இணைந்து, நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். முன்னோடித் திட்டமாக 19 மாநிலங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் பெண்களுக்கு, 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்படும் என்றும், இதனால் பெண்களிடையே, தொழில் முனைவுத் திறன் அதிகரித்து, பெண்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும் அவர் கூறினார்.

--------------------------

*கைலாஷ்நாதன்-காரைக்கால் (11)*

2 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று காரைக்கால் சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதனுக்கு, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில், காவலர் அணிவகுப்பு மரியாதையுடன், வரவேற்று அளிக்கப்பட்டது. குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு. மணிகண்டன்,

முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் இதர அதிகாரிகள், துணை நிலை ஆளுநரை வரவேற்றனர்.

முன்னதாக, படபிடிப்பிற்காக இன்று புதுச்சேரி வந்திருந்த பிரபல தமிழ் திரைப்பட நடிகர் மற்றும் தயாரிப்பாளர் விஜய் சேதுபதி, மரியாதை நிமித்தம், ஆளுநர் மாளிகையில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதனை சந்தித்து பேசினார்.

---------------------------

*புதுச்சேரி போலீஸ்* (9)

புதுச்சேரியில், புதிய காவல் துறை தலைமை இயக்குனராக பொறுப்பேற்றுக் கொண்ட திருமதி ஷாலின் சிங், இன்று வில்லியனூர் காவல் நிலையத்தை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வில்லியனூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி, சட்டம்-ஒழுங்கை பாதுகாக்கவும், காவல் நிலையத்திற்கு வருகின்ற பொது மக்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்ளவும், காவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். முன்னதாக வில்லியனூர் காவல நிலையத்திற்கு வந்து சேர்ந்த அவரை, சட்டம்-ஒழுங்குப் பிரிவு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்.

---------------------------

*புத்தக வெளியீடு* (14)

இந்திய விமானப் படையின் ஹீரோக்கள் பற்றிய சித்திரக் கதைத் தொடரில், முதலாவது புத்தகத்தை விமானப் படையின் தலைவர் ஏர். சீஃப்

மார்ஷல் வி.ஆர் சௌத்ரி, புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். இந்திய விமானப் படையின் போர் வரலாற்றை மக்களுக்கு எடுத்துக் கூறி, இளைஞர்களிடையே கடமை உணர்வை தூண்டும் நோக்கத்திலான இந்நூலில், விமானப் படை மார்ஷல் அர்ஜன் சிங், மற்றும், 1971ஆம் ஆண்டு போய்ரா யுத்தம் பற்றிய வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. இந்திய விமானப் படையில் உள்ள வேலை வாய்ப்புகள், மற்றும், விமானப் படையில் சேர்வதற்கான தகுதிகள் பற்றிய விவரங்களும் புத்தகத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. இந்திய விமானப் படையின் விளம்பர இயக்கங்கள் மூலம் இந்நூல், குழந்தைகளுக்கு இலவசமாக வினியோகிக்கப்படும் என்றும், வரும் அக்டோபர் 8ஆம் தேதி, விமானப் படை தினத்தன்று, இந்நூலின் டிஜிட்டல் வடிவம் வெளியிடப்படும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசிய தொழில் நெடும்பாதை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிதாக 12 இடங்களில், ஸ்மார்ட் தொழில் நகரங்களை அமைக்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

234 நகரங்களில், 730 தனியார் பண்பலை வானொலி அலை வரிசைகளை, மின்னணு முறையில் ஏலம் விடவும், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் மருந்து உற்பத்தித் துறை, 2030ஆம் ஆண்டிற்குள், 130 பில்லியன் டாலர் துறையாக மேம்படும் என்று, மத்திய தொழில் – வர்த்தகத் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

டாக்டர்களின் பாதுகாப்புக் குறித்த தேசிய பணிக் குழு இன்று, மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் மற்றும் காவல்துறைத் தலைவர்களுடன், காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டது.